# மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, ஆரணி

## முழு பாடத்திட்டத் தேர்வு-1, 2023

வகுப்பு : X தமிழ் மதிப்பெண் : 100

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:- 15 x 1 = 15

1. இந்தியாவின் பாரத ஸ்டேட் வங்கி உருவாக்கிய மென்பொருள் ..............................

அ) விலா ஆ) சீலா இ) இலா ஈ) பெப்பர்

2. 'தற்காலத்தின் ஐன்ஸ்டைன்' எனப் புகழப் பெற்றவர் .............

ஆ) நியூட்டன் இ) எட்வின்

ஆ) ஹாக்கிங் ஈ) கலீலியோ

3. Space technology – என்பதன் கலைச்சொல் ..............

அ) மீநுண் தொழில்நுட்பம் இ) விண்வெளித் தொழில்நுட்படம்

ஆ) விண்வெளிக்கதிர்கள் ஈ) புறஊதாக் கதிர்கள்

4. கூற்று 1 : களைப்பு மிகுதியால் முரசுக் கட்டிலில் படுத்துறங்கியவர் இளங்கீரனார்.

கூற்று 2 : இளங்கீரனாருக்கு கவரி வீசியவர் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை

அ) கூற்று 1 சரி 2 தவறு இ) கூற்று 1, 2 இரண்டுமே சரி

ஆ) கூற்று 1, 2 இரண்டுமே தவறு ஈ) கூற்று 2 சரி 1 தவறு

5. அரசே தருக! ......................... தொடர்

அ) வினையெச்சத் தொடர் இ) விளித் தொடர்

ஆ) வேற்றுமைத் தொடர் ஈ) எழுவாய்த் தொடர்

6. மேரி ஜேன், மேயெஸ்வில்லிக்குப் போய்ச்சேர நடக்க வேண்டிய தூரம் .........................

அ) 5 மைல்கள் இ) 3 மைல்கள்

ஆ) 6 மைல்கள் ஈ) 2 மைல்கள்

7. 'ஆலத்து மேல குவளை' இவ்வரிகள் இடம்பெற்றுள்ள நூல் ......................

அ) சீவக சிந்தாமணி இ) மயிலைநாதர் உரை

ஆ) காசிக் காண்டம் ஈ) நன்னூல்

8. குளிர்காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள்............

அ) முல்லை , குறிஞ்சி, மருத நிலங்கள்

ஆ) குறிஞ்சி, பாலை, நெங்தல் நிலங்கள்

இ) குறிஞ்சி, மருதம் , நெய்தல் நிலங்கள்

(2)

9. கோசல நாட்டின் கொடை இல்லாத காரணம் என்ன?
   அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால்
   ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
   இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால்
   ஈ) அங்கு வறுமை இல்லாததால்
10. மேன்மை தரும் அறம் என்பது ..............................
   அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது
   ஆ) புகழ் கருதி அறம் செய்வது
   இ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது
   ஈ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது.
11. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க

| | | |
|---|---|---|
| 1. கொண்டல் | - | மேற்கு |
| 2. கோடை | - | தெற்கு |
| 3. வாடை | - | கிழக்கு |
| 4. தென்றல் | - | வடக்கு |

   அ) 1, 2, 3, 4 ஆ) 4, 3, 2, 1 இ) 3, 1, 4, 2 ஈ) 3, 4, 1, 2

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருக.

"நனந்தலை உலகம் வளைஇ நேமியோடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போல
பாடுஇமிழ் பனிக்கடல் பருகி
கோடுகொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி"

12. இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?
   அ) முல்லைப்பாட்டு இ) மலைபடுகடாம்
   ஆ) நற்றிணை ஈ) சிலப்பதிகாரம்
13. இப்பாடலில் ஆசிரியர் யார்?
   அ) பெருஞ்சித்திரனார் இ) இளங்கோவடிகள்
   ஆ) நப்பூதனார் ஈ) குலசேகராழ்வார்
14. பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகைச் சொற்கள் யாவை?
   அ) பெரும்பெயல், பொழிந்த இ) பாடுஇமிழ், பனிக்கடல்
   ஆ) பாடுஅமிழ், கோடு கொண்டு ஈ) நீர்செல, நிமிர்ந்த
15. பாடலில் இடம்பெற்றுள்ள அளபெடை ..................
   அ) தடக்கை இ) பெரும்பெயல்
   ஆ) வளைஇ ஈ) கொடுஞ்செலவு

www.Padasalai.Net www.TrbTnpsc.com



பகுதி – II (பிரிவு – 1)

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்க:- 4 x 2 = 8

**(21 – வது கட்டாய வினா)**

16. சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச் சுமக்கின்றன ஒல்லித் தண்டுகள் - இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.
17. விடைக்கேற்ற வினா அமைக்க
    அ) அமெரிக்காவின் மினசோட்டா தமிழ்ச் சங்கம் ‘வாழை இலை விருந்து விழாவை’ ஆண்டுதோறம் கொண்டாடி வருகிறது.
    ஆ) கருத்தாழமும், வாசகச் சுவைப்பும் கலந்து இலக்கியங்கள் படைத்தவர் ஜெயகாந்தன்
18. வசன கவிதை – குறிப்பு வரைக
19. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.
20. குறிப்பு வரைக: அவையம்
21. ‘செயற்கை ‘ ................ எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

பகுதி – II

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க:- 5 x 2 = 10

22. வெண்பாவின் ஓசையையும் ஆசிரியப்பாவின் ஓசையையும் எழுதுக
23. “ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி” - இத்தொடர்கள் உணர்த்தும் மரங்களின் பெயர்களையும் தமிழெண்களையும் குறிப்பிடுக.
24. சொற்களை இணைத்து நான்கு புதிய சொற்களை உருவாக்குக.
    தேன், விளக்கு, மழை, மேகலை, வான் , மணி, பூ பொன்
25. கொளல்வினா, கொடைவினா – விளக்குக
26. கலைச்சொல் தருக
    அ) Ultraviolet Rays ஆ) Humanism
27. இரு சொற்களையும் ஒரே தொடரில்அமைத்து எழுதுக
    அ) கொடு – கோடு ஆ) மலை – மாலை
28. சொற்கள் மறைந்துள்ள தொகைகளை அடையாளக் கண்டு தொடரில் அமைக்க :
    அ) இரவு பகல் ஆ) இன்சொல்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



பகுதி – III (பிரிவு – 1)

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி: - 2 x 3 = 6

29. 'பொய்க்கால் குதிரையாட்டம்' என்னும் நிகழ்கலைகுறித்து நீங்கள் அறிந்தவற்றை எழுதுக.

30. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்து சிந்தனைகளை எழுதுக.

31. கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் 1906 ஆம் ஆண்டு மிகவும் சிறப்புடைய ஆண்டாகக் கருதப்படுகிறது. ஆந்த ஆண்டில் தான் காந்தியடிகள் சத்தியாகிரகம் என்ற அறப்போர்முறையைத் தென்னாப்பிரிக்காவில் தொடங்கி வைத்தார். தமிழ்நாட்டைத்தனித்து நோக்கினாலும் வரலாற்றுச் சிறப்பிற்குரிய நிகழ்வுகள் பல அவ்வாண்டில் நடைபெற்றன.வ.உ.சி ஆங்கிலேயர்களுக்கு எதிராகச்சுதெசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்.

அ) இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் எந்த ஆண்டு மிகச் சிறப்புடைய ஆண்டாகக் கருதப்படுகிறது.

ஆ) வ.உ.சி ஆங்கிலேயர்களுக்கு எதிராக என்ன செய்தார்?

இ) சத்தியாகிரகம் என்ற அறப்போர் முறையைத் தென்னாப்பிரிக்காவில் தொடங்கி வைத்தவர் யார்?

பிரிவு – 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி:- 2 x 3 = 6

32. மழை நின்றவுடன் புலப்படும் காட்சியை வருணிக்க.

33. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்பு செய்தது ஏன்? விளக்கம் தருக.

ஆடிபிறழாமல் எழுதுக:-

34. 'விருந்தினனாக' .................. எனத் தொடங்கும் காசிக்காண்டம் பாடல்

(அல்லது)

'நானுரைப்பது தான் நாட்டின் சட்டம்' என முடியும் காலக் கணிதப்பாடல்

பிரிவு – 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி:- 2 x 3 = 6

35. தன்மை அணியை விளக்குக.

36. அலகிடுக

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்

37. ஆசிரியப்பாவின் பொதுவிலக்கணத்தை எழுதுக.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

## பிரிவு – IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளி:- **5 x 5 = 25**

38. அ) இறைவன்புலவர் இடைக்காடனார் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக. (அல்லது)

ஆ) கருணையனின் தாய் மறைவுக்கு வீரமாமுனிவர் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

39. அ) உங்கள் பகுதியில் பழுதுபட்ட சாலைகளைச் சீரமைத்துத் தர வேண்டிமாநகராட்சி ஆணையருக்குக் கடிதம் ஒன்று எழுதுக. (அல்லது)

ஆ) புதிதாக திறன்பேசிவாங்கியிருக்கும் தங்கைக்கு திறன்பேசிப் பயன்பாடு குறித்து அறிவுரைகளைக் கூறி கடிதம் ஒன்று எழுதுக

நயம் பாராட்டுக

40. கவிஞர்யானோர் காலக்கணிதம்

கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!
புவியில் யானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!
இவைசரி யென்றால் எதிர்ப்பதென் வேலை!
ஆக்கல் அளித்தல் அழித்தல் இம் மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை அறிக! - **கண்ணதாசன்**

41. வீட்டு எண் 30, பூங்கா தெரு, திருச்சி என்ற முகவரியைச் சேர்ந்த க.அழகுமலையின் மகள் அ. விமலா என்பவர் மாவட்ட மைய நூலகத்தில் உறுப்பினராகச் சேர இருக்கிறார். அதற்கான படிவத்தை நிரப்புக

42. அ) மொழிபெயர்க்க:

Among the five geographical divisions of the Tamil country insangam literature. The marutam region was fit for cultivation, as it had the most fertile lands. The prosperity of a former depended on getting the necessary sunlight. Seasonal rains and the fertility of the oil, Among these elements of nature, sunlight was considered indispensable the ancient tamil.

(அல்லது)

www.Padasalai.Net www.TrbTnpsc.com



ஆ) இதுகாறும் கற்ற அறங்கள் நமக்கு கை கொடுக்கும் நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களும் அதனால் ஏற்படும் ஏற்படும் நன்மைகளையும் ஐந்தினைப் பட்டியலிடுக.

## பகுதி - V

அனைத்துவினாக்களுக்கும் விரிவாக விடையளி:- 3 x 8 = 24

43. அ) சங்ககால விருந்தோம்பலைப் பாடத்தின் வழி நின்று விளக்குக.

(அல்லது)

ஆ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக

44. அ) கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே- என்கிறது. வெற்றி வேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம் அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றிய கதையைப் பற்றி உங்களின் கருத்துக்களை விவரிக்க

(அல்லது)

ஆ) அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.

45. அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று தருக முன்னுரை – தமிழர் பண்பாட்டில் விருந்து – தமிழ் உணவு முறை – விருந்தோம்பல் தமிழர் பண்பாட்டின் மகுடம் - முடிவுரை

(அல்லது)

ஆ) முன்னுரை – உழவுத்தொழில் - உழவர் - உழவுத்தொழிலின் இன்றியமையாமை – உழவர்களை மதித்தல் - உணவை வீணாக்காமல் உண்ணுதல் -

ஆக்கம்

எய்ம் தமிழ்ச்சங்கம்.

ஆரணி - 16

திருவண்ணாமலை மாவட்டம்.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

DATE :

மாவட்டத் திருப்புதல் தேர்வு - 1

1. இ) இலை   வாழைக் குறிப்புகள்
2. அ) ஹாக்கிங்
3. இ) விண்வெளித் தொழில்நுட்பம்
4. இ) கூற்று 1, 2 இரண்டுமே சரி
5. இ) வினைத் தொடர்
6. அ) 5 - காலங்கள்
7. இ) மயிலைநாதர் உரை
8. இ) கு, டு, செய்து என
9. ஈ) அங்கு வறுமை இல்லாததால்
10. அ) கைம்மாறு கோராமல் அறம் செய்வது
11. இ) 3, 1, 4, 2
12. அ) முல்லைப்பாட்டு
13. அ) நப்பூதனார்
14. அ) பாடிமிழ், கோடு கொண்டு
15. அ) மேகம்

21. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்.

26. அறுவடைக் கதிர்கள் ; மனிதநேயம்

34. காசிக்காண்டம்

விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்
எழுதல் முன் மகிழ்வன செப்பல்
பொருந்து மற்று அவன் தன் அருகுற இருத்தல்
போமெனில் பின் செல்வதாதல்
பரிந்து நன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்
ஒழுக்கமும் வழிபடும் பண்பே.

— அதிவீரராம பாண்டியர்.

ஆக்கம்:
எய்ம் தமிழ்ச் சங்கம்
ஆரணி – 16.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com